சென்னை மண்டல துணைப்பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:-திரு.த.சுவாமிநாதன், M.Sc.,B.L.,

ந.க..எண்.4612-1/ஈ1/2024 நாள்.30.09.2024

பொருள் : மேல்முறையீடு - மதிப்பு நிர்ணயம் தென்சென்னை பதிவு மாவட்டம் குன்றத்தூர் சார்பதிவகம், குன்றத்தூர் "ஆ" கிராமம், ஆவண எண்.5842/2024 சர்வே எண்.674/2, 677, 681/1Apart-க்கு மொத்த ஏக்கர் 2.30 செண்டில் அமைந்துள்ள "பெயரிடப்படாத மனைப்பிரிவுக்கு" மதிப்பு நிர்ணயம் செய்த மாவட்டப்பதிவாளர் ஆணை மீது மேல்முறையீடு - தொடர்பாக

பார்வை : 1.பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்.1/2014 நாள்.27.01.2024

2.பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்.10/2014 நாள்.27.10.2014 (கோப்பு எண்.47544/எல்1/2014)

3.மாவட்டப்பதிவாளர் (நிர்) (உ.ப.து.த நிலை) கடித எண்.5417/இ1/2024 நாள்.11.09.2024

4.மனுதாரர் திரு.இரா.சுரேந்தர், மேலாளர், Urben Tree Real Estate LLP, நுங்கம்பாக்கம் சென்னை- 600 006.

****

ஆணை:-

பொருள் தொடர்பாக தென்சென்னை பதிவு மாவட்டம் குன்றத்தூர் சார்பதிவகம், குன்றத்தூர் "ஆ" கிராமம், ஆவண எண்.5842/2024 சர்வே எண்.674/2, 677, 681/1Apart-க்கு மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.30 செண்டில் அமைந்துள்ள "பெயரிடப்படாத மனைப்பிரிவுக்கு" தென்சென்னை மாவட்டப்பதிவாளர் சதுரடி 1க்கு ரூ.2700/- என மதிப்பு நிர்ணயித்துள்ளதை ஏற்காது, இம்மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

தென்சென்னை பதிவு மாவட்டம் குன்றத்தூர் சார்பதிவகம், குன்றத்தூர் "ஆ" கிராமம், ஆவண எண்.5842/2024 சர்வே எண்.674/2, 677, 681/1Apart--க்கு மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.30 செண்டில் அமைந்துள்ள மனைப்பிரிவினை துணைப்பதிவுத்துறைத்தலைவரால் கள ஆய்வு மேற்கொண்டு, சுற்றுப்புல எண்களின் வழிகாட்டி மதிப்பு, சொத்தின் அமைவிடம், பயன்பாடு, மனைப்பிரிவில் உள்ள மேம்பாடுகள் ஆகிய அனைத்தும் கருத்திற்கொண்டு கீழ்கண்டவாறு மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

பதிவு மாவட்டம்/ சார்பதிவாளர் அலுவலகம்	கிராமம்	புல எண்கள்	நிர்ணயிக்கப்படும் மதிப்பு / வகைப்பாடு
குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகம்	குன்றத்தூர் ஆ கிராமம்	சர்வே எண்.674/2, 677, 681/1Apart-ல் அமைந்த மனைப்பிரிவு	சதுரடி ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) சதுர மீட்டர் ரூ.21530/- (RCV-III)

மேற்படி மதிப்பு நிர்ணயம் தொடர்பாக சார்பதிவாளர் வழிகாட்டிப்பதிவேட்டிலும், இணையதளத்திலும் உரிய குறிப்புகள் மேற்கொள்ளவும், மாவட்டப்பதிவாளர் இதனை கண்காணிக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்.

மாவட்டப்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இம்மதிப்பு நிர்ணய ஆணை பிறப்பிக்கப்படுகிறது. சார்பதிவாளர் சமர்ப்பித்த அறிக்கையில் தவறுகளோ விடுதல்களோ இருப்பின் அதனால் ஏற்படும் இழப்புக்கு சார்பதிவாளரே பொறுப்பாவார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இம்மதிப்பு இந்த மனைப்பிரிவுக்கு மட்டுமே பொறுந்தும். மேலும் மேற்படி சர்வே எண்கள் அரசு புறம்போக்கு நிலங்கள் / அனாதீனம் / வக்போர்டு வாரிய சொத்துக்கள் / இந்து சமய அறநிலையத்துறை சொத்து அல்ல என்பதையும் பதிவு மேற்கொள்ள நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்ட சொத்து அல்ல என்பதையும், ஆவணதாரருக்கு ஆவணத்தின் உரிமை, ஆவணத்தின் தன்மை குறித்தும் உறுதி செய்து கொள்ள சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

30/12/07

துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
சென்னை மண்டலம்.

30/07

வெறுநர்
திரு.இரா.சுரேந்தர்
மேலாளர்
Urben Tree Real Estate LLP,
நுங்கம்பாக்கம் சென்னை- 600 006.
2)மாவட்டப்பதிவாளர்(நிர்வாகம்) தென்சென்னை
3) சார்பதிவாளர் குன்றத்தூர் (மாவட்டப்பதிவாளர் நிர்வாகம் மூலமாக)
4) முக்கிய ஆணைக்கோப்பு.